பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 06 2024 12 40

தலைப்புச் செய்திகள்-

1. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக பிரதமர் திரு நரேந்திரமோடி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்,
2. மூன்றாவது முறையாக பிரதமராக திரு நரேந்திரமோடி பதவியேற்க உள்ளது வரலாற்று சாதனை என்று பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.
3. பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்ட இருமாதக் கொள்கையில் வங்கிகளுக்கான வட்டி விகிதங்களில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.
4. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இம்மாதம் 24-ஆம் தேதி தொடங்குகிறது.
5. ஹங்கேரி சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அமென் ஷெஃராவத் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

----- இனி விரிவான செய்திகள் ---

[]<<<>>>[]

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக பிரதமர் திரு நரேந்திரமோடி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

இன்று காலை புதுதில்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத்சிங், திரு நரேந்திரமோடியின் பெயரை முன்மொழிந்தார்.

இந்த கூட்டத்தில் பேசிய பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, பிரதமர் திரு நரேந்திரமோடி தமது வாழ்க்கையை நாட்டுக்காகவே அர்ப்பணித்து வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.,

கடந்த பத்து ஆண்டுகளில் யாரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு நாட்டின் வளர்ச்சியை அவர் உறுதி செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மூன்றாவது முறையாக பிரதமராக அவர் பதவியேற்க உள்ளது வரலாற்று சாதனை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் பேசுகையில், பிஜேபி தலைமையிலான புதிய அரசு அமைவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

தங்களுக்கு எந்த ஒரு நிர்பந்தமோ, அழுத்தமோ கிடையாது என்றும், சுதந்திரமாக செயல்பட போவதாகவும் அவர் கூறினார்.

உலகின் சக்திவாய்ந்த தலைவராக பிரதமர் திரு நரேந்திரமோடி திகழ்கிறார் என இக்கூட்டத்தில் பேசிய தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.,

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியா மகத்தான வளர்ச்சி பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆந்திர மாநிலத்தில் திரு நரேந்திரமோடி மோடி மேற்கொண்ட பிரச்சாரம் மக்களிடையே பெரிய மாற்றத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியதாகவும் திரு சந்திரபாபு நாயுடு கூறினார்.

இதையடுத்து திரு நரேந்திரமோடி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து புதிய ஆட்சி அமைக்க உரிமை கோரவுள்ளார்.

இந்த கூட்டத்தில் தெலுகுதேசம், ஐக்கிய ஜனதாதளம், மதச்சார்பற்ற ஜனதாதளம், லோக்ஜனசக்தி ராம்விலாஸ் பஸ்வான் பிரிவு, சிவசேனா ஷிண்டே பிரிவு உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களும், தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதனிடையே புதிதாக அமையவுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைச்சரவையில் இடம்பெறவுள்ள உறுப்பினர்கள் குறித்து கூட்டணிக் .கட்சிகளுடன் பேசுவதற்கு பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் ஆகியோரை அக்கட்சி நியமித்துள்ளது.

இந்நிலையில் ஐக்கிய ஜனதாதள கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமும் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ஒடிசா மாநிலத்தில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

ஒடிஸா சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பிஜேபி அறுதிப்பெரும்பான்மை பெற்றுள்ள நிலையில், புதிய முதலமைச்சரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக புதுதில்லியில் இன்று நடைபெற உள்ள அக்கட்சியின் உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

கல்வித்துறையின் தரத்தை உயர்த்துவதற்கு கடந்த பத்து ஆண்டுகளில் தமது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்ததாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஜி-20 நாடுகளின் பல்கலைக்கழக தரவரிசையில் இந்தியா அதிக வளர்ச்சியை பதிவு செய்திருப்பது குறித்து குறிப்பிட்டுள்ள அவர், 2025-ஆம் ஆண்டுக்கான தரவரிசையில் இந்தியா 46-வது இடத்தை பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வுடன் கல்விப் பணியை மேற்கொண்ட நிறுவனங்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தமது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது முறையாக மத்தியில் தாம் பொறுப்பேற்க உள்ள நிலையில் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு உத்வேகம் அளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போவதாக திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

[]<<<>>>[]

இந்திய ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்படவில்லை.

மும்பையில் இன்று ரிசர்வ் வங்கியின் இருமாத கொள்கையை இன்று வெளியிட்டு பேசிய அதன் ஆளுநர் திரு சக்தி காந்ததாஸ் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் ரெப்போ வட்டி விகிதங்களில் மாற்றம் செய்யப்படவில்லை என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து ஆறு புள்ளி ஐந்து சதவீதமாகவே இது நீடிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிலையான வைப்புத் தொகைக்கான வட்டி விகிதம் ஆறு புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

வங்கிகளின் ரொக்க இருப்பு ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக திரு சக்தி காந்ததாஸ் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இம்மாதம் 24-ஆம் தேதி தொடங்கும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு தெரிவித்துள்ளார்.,

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டத்தொடர் எத்தனை நாட்களுக்கு நடைபெறும் என்று அலுவல் ஆய்வுக்குழுக் கூடி முடிவு செய்யும் என்று கூறினார்.

[]<<<>>>[]

நாடாளுமன்ற வளாகத்தில் தலைவர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் சிலைகளை ஒரே இடத்தில் அமைப்பதற்கு மக்களவை செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

அந்த இடத்திற்கு உத்வேகம் அளிக்கும் இடம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் பார்வையாளர்கள் சுலபமாக அனைவரது சிலைகளையும் கண்டு, அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தின் பல்வேறு இடங்களில் சிலைகள் அமைக்கப்பட்டிருந்ததன் காரணமாக பார்வையாளர்கள் அவை அனைத்தையும் காண முடியாமல் இருந்ததாக கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து ஒரே இடத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்களின் சிலைகளை அமைப்பதுடன் அவர்கள் குறித்த விரிவான தகவல்களை நவீன தொழில்நுட்பத்துடன் அளிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சர்வதேச யோகா தினம் இம்மாதம் 21ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி யோகா பெருவிழா இலங்கை தலைநகர் கொழும்புவில் தொடங்கியுள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதர் திரு. சந்தோஷ் ஜா, இதனை முறைப்படி நேற்று தொடங்கி வைத்தார்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இம்மாதம் 13-ஆம் தேதி தொடங்கி 22-ஆம் தேதி வரை யோகா பெருவிழா நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

மேற்குவங்கத்தில் ஏற்பட்டுள்ள தேர்தலுக்குப் பிந்தைய வன்முறையை தடுக்க மத்திய – மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக வழக்கறிஞர்கள் சங்கம் தாக்கல் செய்த பொதுநல மனு மீது விசாரணை நடத்திய நீதிபதிகள் கௌசிக் சந்தா, அபூர்பா சின்ஹா ரே ஆகியோர் அடங்கி அமர்வு, இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

வன்முறையை தடுக்க மாநில காவல்துறை தவறினால் மத்தியப் படையினரைக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியது.

வன்முறை குறித்து மின்னஞ்சலில் வரும் புகாரை சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டும் என்று மேற்குவங்க காவல்துறை தலைவருக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை விவரங்களை இணையதளத்தில் பதிவிட வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

**[]<<<>>>[]**

சூடானில் மத்திய அல்-ஜஸீரா மாகாணத்தில் கிளர்ச்சி துணை ராணுவப் படைகள் நடத்திய தாக்குதலில் 150 பேர் கொல்லப்பட்டனர். 200 பேர் காயமடைந்தனர். அங்குள்ள வத்-அல்-நூர் கிராமத்தில்

40க்கும் மேற்பட்ட வாகனங்களில் ஆயுதங்களுடன் நுழைந்த அவர்கள், குழந்தைகள், பெண்கள் உட்பட பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் 35 குழந்தைகள் கொல்லப்பட்டதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

20க்கும் மேற்பட்ட குழந்தைகள் காயமடைந்ததாகவும் அது கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

நாட்டின் மத்திய மற்றும் தென் பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அடுத்த 4 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை, மத்திய அரபிக் கடல், கர்நாடகா, மகாராஷ்டிரா, தெலங்கானா, ஆந்திர கடலோரப் பகுதிகளில் தீவிரமடைந்துள்ளதாக அது கூறியுள்ளது.

கோவா, மகாராஷ்டிரா, ஆந்திர கடலோரப் பகுதி, சௌராஷ்டிரா, தெலங்கானா, கர்நாடகா ஆகிய பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு லேசானது லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

ஹங்கேரியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அமென் ஷெக்ராவத் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர் 1-11 என்ற புள்ளி கணக்கில் ஜப்பானின் **Rei higuchi-**யிடம் தோல்வியடைந்ததை அடுத்து அவருக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில்

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் கனடா – அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

நியூயார்க்கில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

இந்தோனேஷிய ஓபன் பேட்மிட்டன் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென், டென்மார்க்கின் **Anders Antonsen**-ஐ எதிர்கொள்கிறார்.

ஜெர்மனி சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்த்தில் இந்தியாவின் சுமித்நாகல் இன்று ரஷ்யாவின் இவான் **Gakhov** - எதிர்கொள்கிறார்.

***<u>End of News</u>***